அலகு
2

# எண்கள்



## நினைவு கூர்க

### எண்கள் 1 இலிருந்து 99 வரை

அரங்கத்தில் உள்ள இருக்கைகளில் விடுபட்ட எண்களை எழுதுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | | | | | | 10 |
| | 12 | | | 15 | | | | | |
| 21 | 22 | | | | | | | | |
| | | 33 | 34 | | | | | | |
| | | | | 45 | | 47 | | | |
| | 52 | | | | 56 | | | | |
| | | 63 | | | | | | | 70 |
| | 72 | | | | | | 78 | | |
| 81 | | | | | | | | 89 | |
| | | | 94 | | | | | 99 | |

**ஆசிரியருக்கான குறிப்பு**

கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டு ஆசிரியர் 1-99 வரை எண்களைச் சொல்லச் செய்து வலுவூட்டலாம்.

(i) 72 ஆம் எண்ணுடைய இருக்கையை வட்டமிடுக.

(ii) 20 க்கு முன்னால் உள்ள இருக்கையை வட்டமிடுக.

(iii) சிவப்பு வண்ண இருக்கைகள் எத்தனை உள்ளன?

(iv) 12 மற்றும் 15 க்கு இடைப்பட்ட எண்கள் யாவை?



2nd std Maths 1-term Unit_2_Numbers_Tamil.indd 10 12/29/2019 10:30:15 AM

# 2.1 முன்னி, தொடரி மற்றும் இடைப்பட்ட எண்கள்

## பயணம் செய்வோம்

**எங்கள் பயணம் ! இனிய பயணம்!!**




**கலைச் சொற்கள்**

முன்னி
தொடரி
இடைப்பட்ட எண்கள்

1. சிங்கத்திற்கு முன்னால் நிற்பது எது?
2. பனிக்கரடிக்குப் பின்னால் நிற்பது எது?
3. யானைக்கும் கழுதைக்கும் இடையில் நிற்பது எது?

**ஆசிரியருக்கான குறிப்பு**

மாணவர்களிடம் முன்னால், பின்னால் மற்றும் இடையில் நிற்பவர் குறித்து மேலும் சில வினாக்களை ஆசிரியர் வினவலாம்.

## கற்றல்

**முன்னி மற்றும் தொடரி**

 க்கு முன்னால் நிற்பது  .

எண் 3க்கு முன்னால் இருப்பது 2.

எனவே, 2 என்பது 3ன் **முன்னி**.

 க்கு பின்னால் நிற்பது  .

எண் 3க்கு அடுத்து வருவது 4.

எனவே, 4 என்பது 3ன் **தொடரி** ஆகும்.

 மற்றும்  க்கு இடையில் நிற்பவர்  .

2 க்கும் 4க்கும் இடையில் வருவது 3. எனவே, எண் 2 க்கும் 4 க்கும் **இடைப்பட்ட எண்** 3 ஆகும்.

## செய்து பார்

| முன்னியை எழுதுக. (முன்னால்) | தொடரியை எழுதுக. (பின்னால்) | இடைப்பட்ட எண்களை எழுதுக. |
|---|---|---|
| ___ 72 | 37 ___ | 25 ___ 27 |
| ___ 63 | 49 ___ | 38 ___ 40 |
| ___ 20 | 40 ___ | 69 ___ 71 |

## 2.2 குழுக்களாகப் பிரித்தல்

### பயணம் செய்வோம்

ஒரு தையல் கடையில்



**ஆசிரியருக்கான குறிப்பு**


மேலே உள்ள படத்தின் சூழலை ஆசிரியர் விவரித்துக் கீழ்க்காணும் வினாக்களை வினவி குழுக்களாகப் பொருள்களை வகைப்படுத்தலை வலுவூட்டலாம்.

❖ படத்தில் என்னென்ன பொருள்களைக் காண்கிறாய்? எத்தனை கத்தரிக்கோல்கள் உள்ளன?

❖ பொத்தான்கள் உள்ள புட்டிகள் எத்தனை உள்ளன?

## கற்றல்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அவற்றின் முதல் எழுத்தைக் கொண்டு குழுக்களாகப் பிரித்தல் மற்றும் எண்ணுதல்.




56WQUW

'அ', 'ஆ' மற்றும் 'இ' என்ற எழுத்தில் தொடங்கும் வார்த்தைகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| அணில் | ஆடு | இலை |
| அன்னம் | ஆமை | இட்லி |
| அடுப்பு | ஆணி | இஞ்சி |
| அன்னை | ஆந்தை | |
| அம்மி | | |
| 5 | 4 | 3 |

## செய்து பார்

முதல் எழுத்தைக் கொண்டு கீழ்க்காணும் சொற்களைக் குழுக்களாகப் பிரித்தும், எண்ணியும் எழுதுக.

| | | |
|---|---|---|
| கந்தன் | கிட்டு | காமினி |
| கிரேஸ் | காதர் | கிருஷ் |
| கமலா | காசி | கிரி |
| கிரண் | கவிதா | கர்ணா |
| கதீஜா | கார்த்தி | காவ்யா |

| க | கா | கி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

## செயல்பாடு

### பிரித்து எண்ணுவோம்








- தேவையான அளவிற்குக் கற்கள், மணிகள், புளியங்கொட்டைகள், வேப்பங்கொட்டைகள் ஆகிய பொருள்களை எடுத்துக்கொள்க. அனைத்துப் பொருள்களையும் பெட்டியில் கலந்து வைக்க வேண்டும்.
- மாணவர்களிடம் அவற்றை வகை வாரியாகப் பிரிக்கச் செய்யவும்.
- அவற்றை எண்ணச் செய்து எண்ணிக்கையை கூறவும்.

## கற்றல்

### பொருள்களைப் பத்துகளாகவும் ஒன்றுகளாகவும் குழுப் பிரித்தல்




10 ஒன்றுகள் சேர்ந்தது 1 பத்து ஆகும்.




| பொருள்கள் | பத்துகள் | ஒன்றுகள் | எண் |
|---|---|---|---|
|  | 3 | 2 | 32 |

## செய்து பார்

பொருள்களைப் பத்துகளாகவும், ஒன்றுகளாகவும் பிரித்து எண்களை எழுதுக.

| பொருள்கள் | பத்துகள் | ஒன்றுகள் | எண் |
|---|---|---|---|
|  | | | |
|  | | | |
|  | | | |
|  | | | |




2nd std Maths 1-term Unit_2_Numbers_Tamil.indd 15 12/29/2019 10:30:37 AM

## 2.3 இட மதிப்பு

**பயணம் செய்வோம்**

### சின்னு, மின்னு





**ஆசிரியருக்கான குறிப்பு**

மேலே உள்ள சூழலைப் பற்றிக் கலந்துரையாடி அதில் பல்வேறு எண்களை மாற்றி இடமதிப்பினை விளக்கலாம்.

## கற்றல்

மேலே உள்ள சூழலில் இருந்து 42இன் இட மதிப்பை அறிவோம்.



| எண் | கட்டுகளாக உள்ள கேரட்டுகள் (10) | உதிரி கேரட்டுகள் |
|---|---|---|
| 42 |  |  |

APPB6I

இடமதிப்பு என்பது எண்களில் அவ்வெண் இருக்கும் இடத்தைப் பொறுத்தது ஆகும்.

## செய்து பார்

கொடுக்கப்பட்ட எண்களுக்குப் பத்துகளாகவும் ஒன்றுகளாகவும் மணிச்சரங்கள் வரைக.








| எண் | பத்து மணிகளின் சரங்கள் | உதிரி மணிகள் |
|---|---|---|
| 24 |  |  |
| 53 | | |
| 38 | | |

கீழ்க்காணும் அட்டவணையை நிரப்புக.

| எண் | இடமதிப்பு | | எண் | இடமதிப்பு | |
|---|---|---|---|---|---|
| 23 | 2 பத்துகள் | 3 ஒன்றுகள் | 32 | | |
| 16 | | | 61 | | |
| 55 | | | 55 | | |
| 74 | | | 47 | | |
| 92 | | | 29 | | |
| 31 | | 1 ஒன்று | 13 | 1 பத்து | 3 ஒன்றுகள் |
| 85 | | | 58 | | |

## முயன்று பார்

### அட்டவணையை நிரப்புக

| மணிகள் | ஆணிமணிச் சட்டம் | எண்கள் |
|---|---|---|
|  |  | 3 பத்துகள்<br>4 ஒன்றுகள்<br>30+4=34 |
|  |  | |
|  |  | |
| |  | 4 பத்துகள்<br>5 ஒன்றுகள்<br>40+5=45 |

## செயல்பாடு

- எண் 0 முதல் 9 வரை கொண்ட 2 சோடி எண் அட்டைகள் எடுத்துக்கொள்ளவும்.
- கரும்பலகையில் 'பத்துகள்', 'ஒன்றுகள்' என எழுதி அதன் எதிரே அட்டைகளை வைக்கவும்.
- மாணவர் இருவரை அழைத்துப் 'பத்துகள்' , 'ஒன்றுகள்' எழுதிய இடத்தில் நிற்க வைக்கவும்.
- இருவரும் தனித்தனியே எண் அட்டைகளை எடுக்க வேண்டும்.
- 'பத்துகள்' அருகே நிற்பவர் 'நான்தான் 2, 'பத்துகள்' இடத்தில் இருப்பதால் என்னுடைய இடமதிப்பு 'இருபது' எனக் கூறிவிட்டு இருபது மணிகளைக் காண்பிக்க வேண்டும்.
- 'ஒன்றுகள்' அருகே நிற்பவர் நான்தான் 4, 'ஒன்றுகள்' இடத்தில் நிற்பதால் என்னுடைய இடமதிப்பு 4 'ஒன்றுகள்' எனக் கூறிவிட்டு 4 மணிகளை எடுக்கவும். எனவே, எங்கள் எண் 24 எனக் கூற வேண்டும்.
- வெவ்வேறு ஈரிலக்க எண்ணைக்கொண்டு ஆசிரியர் இச்செயல்பாட்டைத் தொடரலாம்.



2nd std Maths 1-term Unit_2_Numbers_Tamil.indd 18 12/29/2019 10:30:40 AM

## மகிழ்ச்சி நேரம்

### விடைகளுக்கு வண்ணமிடுக

பத்துகளும் ஒன்றுகளும் சமமாக உள்ள கட்டங்களுக்கு மட்டும் நீல வண்ணமிடுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | |

மேலே உள்ள எண்ணட்டையை உற்றுநோக்கி விடையளிக்க.

ஒன்றின் இடமதிப்பு அல்லது பத்தின் இடமதிப்புகளில் 7 இடம்பெறும் எண்களை எழுதுக.

பத்தின் இடமதிப்புகளில் 6 உள்ள அனைத்து எண்களையும் எழுதுக.

ஒன்றின் இடமதிப்புகளில் 8 உள்ள அனைத்து எண்களையும் எழுதுக.

பத்துகள் மற்றும் ஒன்றுகளின் இடமதிப்புகளில் 9 உள்ள எண் எது?



2nd std Maths 1-term Unit_2_Numbers_Tamil.indd 19 12/29/2019 10:30:40 AM

## 2.4 எண்களை ஒப்பிடுதல்

### நினைவு கூர்க

**அதிகம் மற்றும் குறைவு**



எள்ளுருண்டைகள் நெல்லிக் கனிகளை விடக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளன.

நெல்லிக்கனிகள் எள்ளுருண்டைகளை விட அதிக எண்ணிக்கையில் உள்ளன.

### கற்றல்

பூக்களின் எண்ணிக்கையை ஒப்பிடுக





மஞ்சள் தொட்டியில் 9 பூக்களும் நீலத் தொட்டியில் 5 பூக்களும் உள்ளன. நீலத்தொட்டியில்உள்ளதைவிடமஞ்சள் தொட்டியில் அதிக எண்ணிக்கையில் பூக்கள் உள்ளன.

9 என்பது 5 ஐ விடப் பெரியது.

மஞ்சள் தொட்டியில் உள்ளதை விட நீலத் தொட்டியில் குறைவான எண்ணிக்கையில் பூக்கள் உள்ளன.

5 என்பது 9 ஐ விடச் சிறியது.






நீலத் தொட்டியில் 5 பூக்களும் பச்சைத் தொட்டியில் 5 பூக்களும் உள்ளன. இரண்டு தொட்டிகளிலும் சமமான எண்ணிக்கையில் பூக்கள் உள்ளன.

5 என்பது 5 க்குச் சமம்.



## செய்து பார்

பொருள்களை எண்ணிக் கட்டங்களை நிரப்புக. வலப்புறத்திலும் இடப்புறத்திலும் உள்ள எண்களை ஒப்பிட்டுப் பார்த்து, கொடுக்கப்பட்டுள்ள மூன்று கூற்றிலிருந்து சரியான ஒன்றை வட்டமிடுக.

| | | |
|---|---|---|
|  6 | ஐ விடப் பெரியது<br>ஐ விடச் சிறியது<br>க்குச் சமம் | 6  |
|  | ஐ விடப் பெரியது<br>ஐ விடச் சிறியது<br>க்குச் சமம் |  |
|  | ஐ விடப் பெரியது<br>ஐ விடச் சிறியது<br>க்குச் சமம் |  |
| 8 | ஐ விடப் பெரியது<br>ஐ விடச் சிறியது<br>க்குச் சமம் | 7 |
| 4 | ஐ விடப் பெரியது<br>ஐ விடச் சிறியது<br>க்குச் சமம் | 4 |
| 3 | ஐ விடப் பெரியது<br>ஐ விடச் சிறியது<br>க்குச் சமம் | 9 |



2nd std Maths 1-term Unit_2_Numbers_Tamil.indd 21 12/29/2019 10:30:45 AM

## கற்றல்

### எண்களின் ஒப்பீடு

ஓரிலக்க எண்ணோடு ஈரிலக்க எண்ணை ஒப்பிடுவோம்.
எடுத்துக்காட்டு 9 மற்றும் 15



9




15

15 என்பது 9 ஐ விடப் பெரியதாகும்

**இரண்டு இலக்க எண்ணோடு, ஓரிலக்க எண்ணை ஒப்பிட்டால் எப்பொழுதும் இரண்டு இலக்க எண்ணே பெரியதாகும்.**

வெவ்வேறு பத்துகள் கொண்ட ஈரிலக்க எண்களை ஒப்பிட்டுப் பார்ப்போம்.


25 மற்றும் 35



இரு எண்களின் பத்தின் இடமதிப்பை மட்டும் ஒப்பிட்டால் போதுமானது.
25இல் 2 பத்துகள் உள்ளன.
35இல் 3 பத்துகள் உள்ளன.
2 பத்துகள் என்பது 3 பத்துகளை விடச் சிறியது.
எனவே 25 என்பது 35 ஐ விடச் சிறியது.
35 என்பது 25ஐ விடப் பெரியது.

ஒரே பத்துகள் மற்றும் வெவ்வேறு ஒன்றுகள் கொண்ட ஈரிலக்க எண்களை ஒப்பிட்டுப் பார்ப்போம். எடுத்துக்காட்டு

27 மற்றும் 24.



இங்கு பத்தின் இடமதிப்புகள் சமம்
எனவே, ஒன்றுகளை ஒப்பிடுவோம்.
27–இல் 7 ஒன்றுகள் உள்ளன.
24–இல் 4 ஒன்றுகள் உள்ளன.
7 ஒன்றுகள் 4 ஒன்றுகளை விடப் பெரியது.
எனவே, 27 என்பது 24 ஐ விடப் பெரியது
24 என்பது 27 ஐ விடச் சிறியது.

**ஆசிரியருக்கான குறிப்பு**

வெவ்வேறு பத்துகள் கொண்ட ஈரிலக்க எண்களை ஒப்பிடும்போது பத்துகளை மட்டும் ஒப்பிட்டால் போதுமானது எனவும் ஒரே பத்துகள் கொண்டிருக்கும் எண்களை ஒப்பிடும்போது ஒன்றுகளை ஒப்பிட வேண்டும் எனவும் ஆசிரியர் மாணவர்களுக்கு வலியுறுத்தலாம்.

## செய்து பார்

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

i) 75ஐ விடச் சிறிய எண் ____

71 85 98 75

ii) 40ஐ விடப் பெரிய எண் ____

25 49 39 40

iii) 56இக்குச் சமமான எண் ____

60 65 56 57

B5867U



2nd std Maths 1-term Unit_2_Numbers_Tamil.indd 22 12/29/2019 10:30:46 AM

## முயன்று பார்

சரியானவற்றிற்கு (✓) குறியிடவும். தவறானவற்றிற்கு (x) குறியிடவும்.

(i) 3 பத்துகள் 4 ஒன்றுகள் என்பது 2 பத்துகள் 3 ஒன்றுகளை விடப் பெரியது.

(ii) 6 பத்துகள் 5 ஒன்றுகள் என்பது 2 பத்துகள் 3 ஒன்றுகளை விடச் சிறியது.

(iii) 5 பத்துகள் 3 ஒன்றுகளுக்குச் சமமானது 53.

(iv) 55 என்பது 56க்குச் சமம்.

(v) 65 என்பது 64 ஐ விடப் பெரியது.

(vi) 74 என்பது 47 ஐ விடச் சிறியது.

## 2.5 எண் பெயர்

### பயணம் செய்வோம்


#### பாட்டுப் பாடுவோம்





ஒன்னு ஒன்னு ஒன்னு
பூமிக்குச் சூரியன் ஒன்று
ரெண்டு ரெண்டு ரெண்டு
போடும் காலணி இரண்டு






மூனு மூனு மூனு
சிறப்பான கனிகள் மூன்று
நாலு நாலு நாலு
நமக்குத் திசைகள் நான்கு






அஞ்சு அஞ்சு அஞ்சு
ஒரு கை விரல்கள் ஐந்து
ஆறு ஆறு ஆறு
நாவின் சுவைகள் ஆறு
ஏழு ஏழு ஏழு
சப்த சுவரங்கள் ஏழு





எட்டு எட்டு எட்டு
சிலந்திக்குக் கால்கள் எட்டு
ஒன்பது ஒன்பது ஒன்பது
மதிப்பான ரத்தினங்கள்
ஒன்பது






பத்து பத்து பத்து
இரண்டு கைவிரல்கள் பத்து

## கற்றல்

குதிரையைப் பராமரிப்பவர் தன்னுடைய 20 குதிரைகளை ஓர் அணி வகுப்புக்கு அழைத்துச் செல்கிறார். குதிரையின் மீதுள்ள எண் மற்றும் எண் பெயர்களை உற்றுநோக்குக.




## செய்து பார்

பொருத்தமான எண் பெயரை எழுதி அட்டவணையை நிறைவு செய்க.

| எண் | வார்த்தைகளில் | எண் | வார்த்தைகளில் |
|---|---|---|---|
| 1 | | 11 | |
| 2 | | 12 | பன்னிரண்டு |
| 3 | மூன்று | 13 | |
| 4 | | 14 | |
| 5 | | 15 | |
| 6 | | 16 | |
| 7 | | 17 | |
| 8 | | 18 | |
| 9 | | 19 | |
| 10 | | 20 | இருபது |



2nd std Maths 1-term Unit_2_Numbers_Tamil.indd 24 12/29/2019 10:30:50 AM

## செய்து பார்

எண்களுடன் எண்பெயரைப் பொருத்துக

ஏழு


பதினைந்து

பதினொன்று

மூன்று

ஒன்பது

ஐந்து




## முயன்று பார்

கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் ஒளிந்திருக்கும் 11 முதல் 20 வரையிலான எண் பெயர்களைக் கண்டறிந்து வட்டமிடுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | இ | அ | இ | ப | ன் | னி | ர | ண் | டு |
| தி | ரு | ப | தி | ன் | மூ | ன் | று | க | ஒ |
| னொ | ப | தி | ப | தி | னா | ன் | கு | ச | ப |
| ன் | து | னே | க | இ | ப | தி | னை | ந் | து |
| று | ப | ழு | ப | த் | தொ | ன் | ப | து | ன |
| ப | தி | னா | று | ப | தி | னெ | ட் | டு | னு |

## செயல்பாடு

எண்பெயரைக் கண்டுபிடி.

- புளிய "விதைகள்" சிலவற்றையும் எண்பெயர் "1" முதல் 20 வரை எழுதிய எண்ணட்டைகளையும் எடுத்துக்கொள்க.
- ஆசிரியர் 2 மாணவர்களை அழைத்து ஒருவரின் காதில் மெதுவாக ஓர் எண்ணைக் கூற வேண்டும்.
- அந்த மாணவர் அந்தந்த எண்ணுக்கேற்ப புளிய விதைகளை எண்ணி எடுத்து அடுத்த மாணவரிடம் கொடுத்தல் வேண்டும். (எண்ணைக் கூறக் கூடாது)
- அடுத்த மாணவர் புளிய விதைகளை எண்ணிப் பார்த்து அந்த எண்ணிக்கைக்கு உரிய எண் பெயர் எழுதிய அட்டையை எடுக்க வேண்டும்.
- அனைத்து மாணவர்களும் எண் பெயர்களை நன்றாக அறியும் வரை ஆசிரியர் இச்செயல்பாட்டைத் தொடரலாம்.



2nd std Maths 1-term Unit_2_Numbers_Tamil.indd 25 12/29/2019 10:30:50 AM










## 2.6 கூட்டல்

### நினைவு கூர்க

கண்மணி, ஆஷா மற்றும் பிரஷாந்த் ஆகியோர் ஐஸ் குச்சிகளைப் பயன்படுத்திக் கைவினைப் பொருள்கள் செய்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் பயன்படுத்திய குச்சிகளின் மொத்த எண்ணிக்கையைக் கண்டறிந்து நீல நிறப் பெட்டியில் எழுதுக.



CEIUA6

| | | | | | |
|---|---|---|---|---|---|
|  |  10 | + |  8 | = |  |
|  |  9 | + |  6 | = |  |
|  |  10 | + |  9 | = |  |

**ஆசிரியருக்கான குறிப்பு**

பல்வேறு பொருள்களைக் கொண்டு எண்களின் கூடுதலைக் காண மாணவர்களுக்கு ஆசிரியர் உதவலாம்.



2nd std Maths 1-term Unit_2_Addition_Tamil.indd 26 12/29/2019 10:40:33 AM

## பயணம் செய்வோம்

### வன விலங்குப் பூங்காவில் பயணம்

**கலைச் சொற்கள்**
- எண்ணுதல்
- கூட்டுதல்
- மொத்தம்
- சேர்த்தல்
- ஒட்டுமொத்தம்

பூங்கா தொடர்வண்டியில் 20 நபர்கள் உள்ளனர். ஒவ்வொரு நிறுத்தத்திலும் தொடர்வண்டியில் ஏறும் நபர்களை ராஜ் எண்ணுகிறான்.



வெள்ளைப் புலிகளைப் பார்த்த பிறகு 2 குழந்தைகள் தொடர்வண்டியில் ஏறினர்.



20 + 2 = 22

நீர்வாழ் காட்சிச் சாலையிலிருந்து 5 குழந்தைகள் தொடர்வண்டியில் ஏறினர்.



22 + ___ = ___

2 குழந்தைகள் வண்ணத்துப்பூச்சிப் பூங்காவிலிருந்து தொடர்வண்டியில் ஏறினர்.



___ + ___ = ___

**ஆசிரியருக்கான குறிப்பு**

ஆசிரியர் மேற்காணும் சூழலைப் பயன்படுத்தித் தொடர்வண்டியில் ஏறும் குழந்தைகளின் எண்ணிக்கையை மாற்றி அமைத்து மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைக் காண ஊக்கப்படுத்தவும்.





2nd std Maths 1-term Unit_2_Addition_Tamil.indd 27 12/29/2019 10:40:33 AM

## கற்றல்

1. முத்து 32 எலுமிச்சைப் பழங்களையும், கண்ணன் 5 எலுமிச்சைப் பழங்களையும் வாங்கினார்கள். அவர்கள் வாங்கிய மொத்த எலுமிச்சைப் பழங்கள் எத்தனை?


| பத்துகள் | ஒன்றுகள் | ப ஒ |
|---|---|---|
|  |  | 3 2 |
| |  | + 5 |
| | | 3 7 |

2. அபி 24 கொய்யாப் பழங்களையும், ஜெஸி 33 கொய்யாப் பழங்களையும் பறித்தார்கள். அபி மற்றும் ஜெஸி பறித்த மொத்தப் பழங்கள் எத்தனை?

| பத்துகள் | ஒன்றுகள் | ப ஒ |
|---|---|---|
|  |  | 2 4 |
|  |  | + 3 3 |
| | | 5 7 |

## செய்து பார்



1. பலூன் வியாபாரியிடம் 23 இளம் சிவப்பு நிற பலூன்களும் 4 மஞ்சள் நிற பலூன்களும் இருந்தன. அவரிடம் உள்ள மொத்த பலூன்களின் எண்ணிக்கையைக் காண்க.

| பத்துகள் | ஒன்றுகள் | ப ஒ |
|---|---|---|
|  |  | 2 3 |
| |  | + 4 |
| | | |




2. பள்ளிகளுக்கு இடையேயான போட்டியில் ஒரு பள்ளி 30 தங்கப் பதக்கங்களும் 21 வெள்ளிப் பதக்கங்களும் வென்றது. அப்பள்ளி வென்ற மொத்தப் பதக்கங்களின் எண்ணிக்கையைக் காண்க.

| பத்துகள் | ஒன்றுகள் | ப ஒ |
|---|---|---|
|  | | 3 0 |
|  |  | + 2 1 |
| | | |

3. ரீனா, ஒரு நாள் 30 பேனாக்களைக் கடையிலிருந்து வாங்கினாள். அடுத்த நாள் மேலும் 50 பேனாக்களை வாங்கினாள். அவளிடம் உள்ள மொத்தப் பேனாக்களின் எண்ணிகை எத்தனை?

| பத்துகள் | ஒன்றுகள் | ப ஒ |
|---|---|---|
|  | | 3 0 |
|  | | + 5 0 |
| | | |

4. மணியிடம் 54 கரிக்கோலும், பொன்னியிடம் 21 கரிக்கோலும் மாலினியிடம் 23 கரிக்கோல்களும் இருந்தன. அவர்களிடம் இருந்த மொத்தக் கரிக்கோல்களின் எண்ணிக்கையைக் காண்க.

| பத்துகள் | ஒன்றுகள் | ப ஒ |
|---|---|---|
|  |  | 5 4 |
|  |  | 2 1 |
|  |  | + 2 3 |
| | | |




2nd std Maths 1-term Unit_2_Addition_Tamil.indd 29 12/29/2019 10:40:51 AM

## கற்றல்


### கூட்டலின் பல்வேறு வழிகள்

1. விரல்களைப் பயன்படுத்திக் கூட்டல் : 24 + 3





24 + 3 = 27

2. எண்கோட்டைப் பயன்படுத்திக் கூட்டல் : 14 + 5





14 + 5 = 19

3. மணிகளைப் பயன்படுத்திக் கூட்டல் :
32 + 24 + 13




32 + 24 + 13 = 69

4. ஆணிமணிச் சட்டத்தைப் பயன்படுத்திக் கூட்டல் : 26 + 61




2 6 + 6 1 = 8 7

## செய்து பார்

### பின்வருவனவற்றுக்குக் கூடுதல் காண்க

| | ப | ஒ |
|---|---|---|
| | 2 | 5 |
| + | | 3 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | 4 | 2 |
| + | | 0 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | 6 | 0 |
| + | | 1 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | 4 | 5 |
| + | 2 | 3 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | 2 | 3 |
| + | 4 | 0 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | 5 | 0 |
| + | 3 | 0 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | 3 | 6 |
| | 2 | 2 |
| + | 4 | 1 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | 4 | 8 |
| | 1 | 0 |
| + | 3 | 0 |
| | | |

| | ப | ஒ |
|---|---|---|
| | 7 | 6 |
| | | 2 |
| + | 2 | 1 |
| | | |



2nd std Maths 1-term Unit_2_Addition_Tamil.indd 30 12/29/2019 10:40:53 AM

பின்வருவனவற்றைக் கூட்டுக.

i) 34 + 35 = ____ ii) 13 + 2 + 1 = ____ iii) 14 + 10 + 2 = ____

iv) 34 + 30 + 3 = ____ v) 30 + 26 + 40 = ____ iv) 45 + 23 + 21 = ____


## முயன்று பார்

பத்துகள் மற்றும் ஒன்றுகளுக்கு வண்ணமிட்டுக் கொடுக்கப்பட்டுள்ள எண்களின் கூடுதல் காண்க. 43 + 25

உதிரி மணிகளை வண்ணமிட்டு ஒன்றுகளின் கூடுதல் காண்க.

10 மணிச்சரங்களை வண்ணமிட்டுப் பத்துகளின் கூடுதல் காண்க.


| பத்துகள் | ஒன்றுகள் |
|---|---|



மொத்தம் ____

## மகிழ்ச்சி நேரம்

எடுத்துக்காட்டில் உள்ளதைப்போல் இடப்புறம் உள்ள எண்களை 10 மற்றும் 14 உடன் கூட்டி வலப்புறத்திலுள்ள வட்டங்களை நிறைவு செய்க.






2nd std Maths 1-term Unit_2_Addition_Tamil.indd 31
12/29/2019 10:40:53 AM

## கூடுதலாக அறிவோம்

இரண்டும் – ஒன்றே



| | | | | |
|---|---|---|---|---|
| 23 | + | 5 | = | 28 |
| 13 | + | 0 | = | 13 |
| 23 | + | 35 | = | 58 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | + | 23 | = | 28 |
| 0 | + | 13 | = | 13 |
| 35 | + | 23 | = | 58 |

DNUICH

## செயல்பாடு

- ❖ மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துக் குழுவிற்கு 100 குச்சிகள் வீதம் (10 குச்சிகளாகக் கொண்ட கட்டுகளையும், உதிரிக் குச்சிகளையும் சேர்த்து) கொடுக்கவும்.
- ❖ ஆசிரியர் கூட்ட வேண்டிய இரு எண்களைக் கூறவும் (எ.கா.) 42, 56
- ❖ முதல் குழு 40 (4 பத்துகள்) + 2 குச்சிகளையும் இரண்டாம் குழு 50 (5 பத்துகள்) + 6 குச்சிகளையும் எடுக்க வேண்டும்.
- ❖ இரு குழுக்களிலும் உள்ள கட்டுகளையும், உதிரிகளையும் ஒன்றாகச் சேர்த்த பின், இருக்கும் உதிரிகளைத் தனியாகவும் கட்டுகளைத் தனியாகவும் கூட்டுக.
- ❖ ஆசிரியர் முதலில் ஒன்றுகளையும் பிறகு பத்துகளையும் கூட்டி விடை காண அறிவுறுத்தவும்.

## மனக் கணக்கு

1. 30 குழந்தைகள் கயிறு தாண்டும் விளையாட்டு விளையாடினர். மேலும் 20 குழந்தைகள் அவ்விளையாட்டில் சேர்ந்தனர். எனில், அவ்விளையாட்டில் உள்ள மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கை என்ன?
2. சுஜி 12 குழந்தைகளையும் 15 பெரியவர்களையும் பூங்காவில் எண்ணிப் பார்த்தாள் எனில் அவள் எண்ணிப் பார்த்த மொத்த மனிதர்களின் எண்ணிக்கை என்ன?
3. ஒரு மீனவர் காலையில் 22 மீன்களையும் மதியம் 12 மீன்களையும் பிடித்தார். அவர் பிடித்த மொத்த மீன்களின் எண்ணிக்கை என்ன?
4. வகுப்பறையில் 15 ஆண்களும் 24 பெண்களும் இருந்தனர். வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை என்ன?
5. ஒரு பறவைகள் சரணாலயத்தில் 33 கிளிகளும் 15 மயில்களும் இருந்தன. எனில், அங்கிருந்த மொத்தப் பறவைகள் எத்தனை?






2nd std Maths 1-term Unit_2_Addition_Tamil.indd 32 12/29/2019 10:40:53 AM

# 2.7 கழித்தல்



## நினைவு கூர்க

படத்தினை உற்றுநோக்கி, பொருள்களைக் கோடிட்டு அடித்துக் கழித்தல் கூற்றினை எழுதவும் எழுத்துக்காட்டில் உள்ளதைப்போல்



1. விடை 2 பெறுவதற்கான கழித்தல் கூற்றினைக் கட்டத்தில் எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| 6 - 4 | | | |

2. விடை 6 பெறுவதற்கான எண் கூற்றினை எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| | | | |

3. விடை 1 பெறுவதற்கான கழித்தல் கூற்றினை எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| | | | |

4. பின்வருவனவற்றைக் கழிக்க

| | | | |
|---|---|---|---|
| 1 3 | 1 6 | 1 8 | 1 0 |
| - 7 | - 9 | - 4 | - 3 |
| ____ | ____ | ____ | ____ |

**ஆசிரியருக்கான குறிப்பு**

மாணவர்கள் கழித்தலைப் புரிந்து விடையளிக்க ஆசிரியர் உதவுக.

## பயணம் செய்வோம்

### பிறந்த நாள் கொண்டாட்டம்

சதிஷ் தன் பிறந்த நாளில் 20 கடலை மிட்டாய்களைத் தன் நண்பர்களுக்கு வழங்கினான்.




கழித்தல் கூற்றினை நிறைவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | - | 4 | = | 16 |
| 16 | - | 3 | = | 13 |
| 13 | - | 5 | = | 8 |
| | - | 2 | = | |
| | - | 3 | = | |
| | - | ? | = | 0 |

**கலைச் சொற்கள்**

நீக்க

வேறுபாடு

மீதி

FDP2G5





**ஆசிரியருக்கான குறிப்பு**



ஆசிரியர் மேலே கொடுக்கப்பட்ட சூழலில் குழந்தைகள் எடுத்த கடலை மிட்டாய்களின் எண்ணிக்கையை வேறுபடுத்திப் பல்வேறு கழித்தல் கூற்றினை உருவாக்கலாம்.

## கற்றல்

1. கமலியிடம் 25 வெள்ளரிக் காய்கள் உள்ளன. அவற்றில் 3ஐ தன் நண்பர்களுக்கு வழங்கினாள். அவளிடம் மீதமுள்ள காய்களின் எண்ணிக்கை எவ்வளவு?

| பத்துகள் | ஒன்றுகள் | ப | ஒ |
|---|---|---|---|
|  |  | 2 | 5 |
| | | − | 3 |
| | | 2 | 2 |

2. ஒரு கடையில் 56 இளநீர்கள் உள்ளன. அவற்றில் 30 விற்பனையாகிவிட்டன. கடையில் மீதமுள்ள இளநீர்களின் எண்ணிக்கை என்ன?



| பத்துகள் | ஒன்றுகள் | ப | ஒ |
|---|---|---|---|
|  |  | 5 | 6 |
| | | − 3 | 0 |
| | | 2 | 6 |




2nd std Maths 1-term Unit_2_Subtraction_Tamil.indd 34 12/29/2019 10:59:08 AM

## செய்து பார்



1. லீலா 28 எலுமிச்சைகளைப் பறித்தாள். அவற்றில் 5 எலுமிச்சைகளைப் பழச்சாறு எடுக்கப் பயன்படுத்தினாள். மீதம் உள்ள எலுமிச்சைகளின் எண்ணிக்கை என்ன?

| பத்துகள் | ஒன்றுகள் | ப | ஒ |
|---|---|---|---|
|  |  | 2 | 8 |
| | | − | 5 |
| | | | |


2. பாலா 26 காகிதக் கப்பல்களும் கலா 6 காகிதக் கப்பல்களும் செய்தனர். கலாவை விட பாலா எத்தனை கப்பல்கள் அதிகமாகச் செய்தான்?

| பத்துகள் | ஒன்றுகள் | ப | ஒ |
|---|---|---|---|
|  |  | 2 | 6 |
| | | − | 6 |
| | | | |

3. சிவா 36 வேர்க்கடலைகள் வைத்திருந்தான். அதில் விளையாட்டு நேரத்தில் 14 வேர்க்கடலைகளை உண்டுவிட்டான் எனில், அவனிடம் மீதம் உள்ள வேர்க்கடலைகளின் எண்ணிக்கை என்ன?

| பத்துகள் | ஒன்றுகள் | ப | ஒ |
|---|---|---|---|
|  |  | 3 | 6 |
| | | − 1 | 4 |
| | | | |

4. காவியாவின் அம்மா 57 எள்ளுருண்டைகள் செய்தார். அவற்றுள் 13 எள்ளுருண்டைகளைக் காவியா தன் நண்பர்களுடன் உண்டாள். தற்போது மீதமுள்ள எள்ளுருண்டைகளின் எண்ணிக்கை என்ன?

| பத்துகள் | ஒன்றுகள் | ப | ஒ |
|---|---|---|---|
|  |  | 5 | 7 |
| | | − 1 | 3 |
| | | | |




2nd std Maths 1-term Unit_2_Subtraction_Tamil.indd 35 12/29/2019 10:59:15 AM


## கற்றல்

### பல்வேறு வழிகளில் கழித்தல்

விரல்களைக் கொண்டு கழித்தல் : 38 – 5





எண்கோட்டில் கழித்தல் 38 – 5




38 – 5 =33


மணிகளைக் கொண்டு கழித்தல் 38 – 25



38 – 25 =13

ஆணிமணிச் சட்டத்தைக் கொண்டு கழித்தல்


98 – 25




9 8 - 2 5 = 7 3

## செய்து பார்

மணிகளை அடித்துக் கழிக்க 48 – 5




ஆணிமணிச் சட்டத்தைக் கொண்டு கழிக்க

36 - 3





3 6 - 3 =

78 – 35



69 – 47




6 9 - 4 7 =



2nd std Maths 1-term Unit_2_Subtraction_Tamil.indd 36 12/29/2019 10:59:17 AM

மதிப்பு காண்க.

| ப | ஒ |
|---|---|
| 8 | 9 |
| − | 7 |
| | |

| ப | ஒ |
|---|---|
| 5 | 6 |
| − 2 | 2 |
| | |

| ப | ஒ |
|---|---|
| 8 | 4 |
| − 7 | 3 |
| | |

| ப | ஒ |
|---|---|
| 4 | 8 |
| − | 7 |
| | |

| ப | ஒ |
|---|---|
| 7 | 2 |
| − 3 | 2 |
| | |

| ப | ஒ |
|---|---|
| 6 | 0 |
| − 2 | 0 |
| | |

## கூடுதலாக அறிவோம்

கொடுக்கப்பட்ட கூட்டல் கூற்றிலிருந்து 2 கழித்தல் கூற்றுகளை நாம் உருவாக்கலாம்.

20 + 7 = 27 → 27 – 7 = 20, 27 – 20 = 7

32 + 17 = 49 → 49 – 32 = 17, 49 – 17 = 32

## செயல்பாடு


- ❖ மாணவர்களை இருவர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கவும். பத்து குச்சிகளாகக் கொண்ட கட்டுகள் ஒன்பதை ஒரு பெட்டியிலும் உதிரிகளாக 9 குச்சிகளை ஒரு பெட்டியிலும் போடவும்.
- ❖ ஆசிரியர் ஒரு கழித்தல் கூற்றினைக் கரும்பலகையில் எழுதிவிட்டு ஒரு குழுவினை அழைக்கலாம்.
- ❖ கழித்தல் கூற்றிலுள்ள எண்ணிற்குத் தகுந்தாற்போல் குழுவிலுள்ள ஒருவர் பத்து குச்சிகள் கொண்ட கட்டுகளையும் மற்றொருவர் உதிரிக்குச்சிகளையும் எடுக்கவேண்டும்.
- ❖ கழித்தல் கூற்றிற்கான விடைகாண அவர்கள் எடுத்த கட்டுகளையும் உதிரிக்குச்சிகளையும் மீண்டும் பெட்டியில் போட்டுவிட்டுத் தங்களிடம் மீதமுள்ள குச்சிகளை மற்றவர்களுக்குக் காட்டவும்.
- ❖ ஆசிரியர் மற்ற குழுக்களைக் கொண்டு செயல்பாட்டைத் தொடரலாம்.



2nd std Maths 1-term Unit_2_Subtraction_Tamil.indd 37 12/29/2019 10:59:17 AM

## நீயும் கணித மேதைதான்


கொடுக்கப்பட்டுள்ள அமைப்பினை உற்றுநோக்கிக் கழித்தல் கூற்றினை நிறைவு செய்க.





## மகிழ்ச்சி நேரம்

எடுத்துக்காட்டில் உள்ளதைப்போல் கழித்தல் கூற்றை எழுதி வெளி வட்டத்தினை நிறைவு செய்க.

GMZQIG






2nd std Maths 1-term Unit_2_Subtraction_Tamil.indd 38 12/29/2019 10:59:17 AM

## முயன்று பார்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கழித்தல் கூற்றுகளுக்கு விடை காண்க.

| கழித்தல் கூற்று | தீர்வு |
|---|---|
| 37 – 30 | |
| 46 – 41 | |
| 68 – 54 | |
| 70 – 70 | |
| 57 – 42 | |
| 21 – 0 | |
| 39 – 20 | |

பின்வரும் எண்களைப் பயன்படுத்திப் பல்வேறு கணிதக் கூற்றுகளை உருவாக்கித் தீர்வு காண்க.

0, 20, 21, 30, 37, 39, 41, 42, 46, 54, 57, 68, 70

| கழித்தல் கூற்று | தீர்வு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

## மனக் கணக்கு

1. இலக்கியா 29 பூக்களைக் கொண்டு பூங்கொத்து உருவாக்கினாள். அவற்றில் 12 பூக்கள் விழுந்து விட்டன. பூங்கொத்தில் மீதமுள்ள பூக்களின் எண்ணிக்கை என்ன?
2. 19 குழந்தைகள் பூங்காவில் இருந்தனர். அவர்களில் 2 பேர் வெளியேறினால் பூங்காவில் மீதமுள்ள குழந்தைகள் எத்தனை பேர்?
3. தோட்டத்தில் 33 பறவைகள் இருந்தன. அதில் 11 பறவைகள் பறந்து சென்றுவிட்டால் மீதமுள்ள பறவைகளின் எண்ணிக்கை என்ன?
4. ஒரு பண்ணையில் 64 ஆடுகள் இருந்தன. 11 ஆடுகளை அடுத்த பண்ணைக்கு எடுத்துச்சென்று விட்டால் மீதம் எத்தனை ஆடுகள் இருக்கும்?
5. ஒரு பெட்டியில் 38 வண்ணம் தீட்டும் தூரிகைகள் உள்ளன. 10 தூரிகைகளைப் பயன்படுத்திவிட்டால், பயன்படுத்தப்படாத தூரிகைகள் எத்தனை இருக்கும்?



2nd std Maths 1-term Unit_2_Subtraction_Tamil.indd 39 12/29/2019 10:59:17 AM